செய்தி வெளியீட்டு எண்.104 நாள்.17.02.2017

**திருவள்ளூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் சத்துணவு மையங்களில் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் கடைசி தேதி 28.02.2017 வரை நீட்டிப்பு என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்ட மையங்களில் ஏற்பட்டுள்ள சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்ட செய்தி குறிப்பு.

திருவள்ளூர் மாவட்ட சத்துணவு திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனத்திற்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் எனவும், விண்ணப்பத்துடன் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும், கல்வி சான்று நகல், மாற்று சான்றிதழ் நகல், சாதி சான்றிதழ் நகல், குடும்ப அட்டை நகல், இருப்பிட சான்று நகல், வருமானச்சான்று நகல், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் எனில் அதற்கான வட்டாட்சியர் சான்று, மாற்றுத்திறனாளிகள் எனில் அதற்குரிய அடையாள அட்டை (ம) மருத்துவர் சான்று நகல்களுடன் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சிகளில் 17.02.2017 வரையில் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது இக்காலக்கெடுவினை நீட்டித்து விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை வரும் 28.02.2017 அன்று மாலை 5.00 மணி வரையில் அலுவலக வேலை நேரத்தில் அந்தந்த ஊராட்சி ஒன்றியம்/ நகராட்சி அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~